

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (12.9.2023) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி பார்கவுன்சிலில் வழக்கறிஞராக பதிவு செய்ததையொட்டி திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவியின் மகன் எஸ்.கே.தமிழ்வேல் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### வேலூரில் கழக முப்பெரும் விழா!

# கடலூர் கிழக்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!



கடலூர், செப். 14-

வேலூரில் 17.9.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை நடைபெறவுள்ள கழக முப்பெரும் விழாவில் கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.வினர் பெருந்திரளாக கலந்துகொள்ள வேண்டுமென வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா - திமுக பவளவிழா ஆண்டு, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பிறந்த நாள் விழா, கழகம் தொடங்கிய நாள் ஆகிய முப்பெரும் விழா 17.9.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை வேலூரில் பள்ளிக் கொண்டான், டோல் கேட் அருகில் நடைபெறும். இந்த முப்பெரும் விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள் கலந்துக் கொண்டு விருதுகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

அதுசமயம் முப்பெரும் விழாவில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர மேயர், ஒன்றிய குழுத்தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிமன்ற தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள், மாவட்டக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, இலக்கிய அணி, கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சுற்றுச்சூழல் அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, தொழிலாளர் அணி, அயலக அணி, தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், கேட்டுக் கொண்டுள்ளார்.

### புதிய குடும்ப அட்டை பெற ஆன்லைனில் விண்ணப்பித்தால்

# 15 நாளில் வீடு தேடி ரேஷன் கார்டு வரும்!

## அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு



திண்டுக்கல், செப். 14-

ஒட்டன்சத்திரம் தொகுதியில் ரூ.2.49 கோடியில் திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டிபல்வேறு திட்ட பணிகளை உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி தொடங்கி வைத்தார்.அப்போது அவர் பேசியதாவது

முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து அதை தொடர்ந்து செயல்படுத்தி, இந்தியாவிலேயே தலைசிறந்த முதல்வராக திகழ்கிறார். தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக மாற்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு, தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்தி வருகிறார்.

தமிழகத்தில் குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களுக்கு 15 நாட்களில் குடும்ப அட்டை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது புதிய குடும்ப அட்டை பெற ஆன்லைனில் விண்ணப்பித்தால் வீட்டிற்கு தபாலில் குடும்ப அட்டை வந்து சேரும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆட்சிப்பொறுப்பேற்ற 2 ஆண்டுகளில் தமிழகத்தில் இதுவரை சுமார் 15 லட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. குடும்ப அட்டை எதிர்பாரா தவிதமாக தொலைந்து போனால், புதிய குடும்ப அட்டை பெற ஆன்லைனில் விண்ணப்பித்தால் வீட்டிற்கு தபாலில் குடும்ப அட்டை வந்து சேரும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நியாயவிலைக்கடைகளில் தரமான அரிசி, பருப்பு, எண்ணெய், சர்க்கரை போன்ற பொருட்கள் பொதுமக்களுக்கு வழங்கப் படுகின்றன. பொதுமக்களுக்கு தரமான அரிசி வழங்க வேண்டும் என்பதற்காக கலர்டாப்ளர் இயந்திரம் பொருத்தப்பட்ட அரிசி ஆலைகளில் மட்டுமே நெல் அரவை செய்யப்பட்டு, அரிசி கொள்முதல் செய்யப்பட்டு, பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.

தமிழகத்தை குடிசை இல்லா மாநிலமாக மாற்ற ஏழை, எளிய வீடு இல்லாத மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு பல்வேறு திட்டங்களின் கீழ் வீடு வழங்கப்பட்டு வருகிறது. தொடக்க வேளாண்மை கூட்டுறவு மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான கடன் ரூ.12.00 இலட்சத்திலிருந்து ரூ.20.00 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் தற்போது கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தை கொண்டு வந்துள்ளார். தகுதியான இல்லத்தரசிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் திட்டம் செப்டம்பர் 15ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்படவுள்ளது. இத்திட்டத்தில் 1.06 கோடி மகளிர் பயனடையவுள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்காலத்தில்தான் விவசாயத்திற்கு இலவச மின் இணைப்பு வழங்கும் திட்டம் கொண்டுவரப்பட்டது. நடப்பு ஆண்டில் 2 லட்சம் விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

ஒட்டன்சத்திரம், பழனி சட்டமன்ற தொகுதிக்கு காவிரி நீர் ஆதாரத்தைக் கொண்டு கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்படுத்த ரூ.1000 கோடி மதிப்பீட்டிலான குடிநீர் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பூங்கா (ம) விளையாட்டுதிடல் துறை**

கலைஞர் 100 1924 - 2023

பூ.து.ந.க.எண்.பி2/1773/2023

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

மேற்பார்வை பொறியாளர் (பூங்கா) அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

**“சிங்கார சென்னை 2.0”** திட்டத்தின் கீழ் மண்டலம்-1, 2, 3, 4, 5, 12 மற்றும் 14 வரையில் பூங்காக்கள் / விளையாட்டுத்திடல்கள் அமைக்கும் மற்றும் மேம்படுத்தும் பணிகள் (சிப்பம் 1 முதல் 9 வரை) **(Two Cover System)**

**குறைந்தபட்சம் ரூ.19.54 லட்சம், அதிகபட்சம் ரூ. 151.75 லட்சம்**
**முன்வைப்பு தொகை பணியின் உத்தேச தொகையில் 1%**

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **03.10.2023** அன்று மாலை **3.00** மணி வரை

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **04.10.2023** அன்று மாலை **3.30** மணி

மேலும் விவரங்களுக்கு **www.tntendersgov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 5067 / ஒப்பந்தப்புள்ளி / 2023

**கண்காணிப்பு பொறியாளர் (பூ (ம) வி)**

**தமிழ்நாடு அரசு / நீர்வளத்துறை**
**பாலாறு வடிநில வட்டம், சேப்பாக்கம், சென்னை – 600 005.**

கலைஞர் 100 1924 - 2023

**மொத்த தொகை ஒப்பந்த முறை–விலை விகித ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு / இரு உறை ஒப்பந்த வழி முறை**
**மின்னணு – குறுகியகால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.11 PBC / 2023–24 / நாள். 12.09.2023**

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும் தகுதியுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சிறப்பு தலைமைப் பொறியாளர், நீ.வ.து., பாலாறு வடிநில வட்டம், சேப்பாக்கம், சென்னை–5 அவர்களால் இ–டெண்டர் மூலமாக இரு உறை ஒப்பந்த வழியாக இணையதளத்தில் தகுதியுள்ள ஒப்பந்தம் கீழ்கண்டவாறு வரவேற்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | வேலையின் தொகை (சரக்கு மற்றும் சேவை வரி 18% உட்பட) ரூபாய் இலட்சத்தில் | ஒப்பந்தம் சமர்ப்பிக்கும் நாள் மற்றும் நேரம் (சர்வர் நேரப்படி) | ஒப்பந்தம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் (சர்வர் நேரப்படி) |
|---|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் வட்டத்தில் பக்கிங்காம் கால்வாய் வடிகாலில் சேரும் கீழ்கட்டளை உபரி நீர் கால்வாய் (Reach–II) ஒருங்கிணைந்த புனரமைத்தல் மற்றும் புத்துயிர் அளித்தல் பணிகள். | 3324.00 | 06.10.2023 11.00 மணி வரை | 06.10.2023 15.00 மணி |
| 2. | காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டத்தில் அடையாறு வடிகாலில் சேரும் மலைப்பட்டு சோமங்கலம் (Reach–II) மற்றும் Reach–I –ல் உள்ள நடைமுறைபடுத்தப்படாத பகுதிகளில் ஒருங்கிணைந்த புனரமைத்தல் மற்றும் புத்துயிர் அளித்தல் பணிகள். | 4910.00 | 06.10.2023 11.00 மணி வரை | 06.10.2023 15.15 மணி |
| 3. | சென்னை மாவட்டம், அமிந்தகரை, அயனாவரம், எழும்பூர், பெரம்பூர் மற்றும் புரசைவாக்கம் வட்டங்களில் பக்கிங்காம் கால்வாய் வடிகாலில் சேரும் ஓட்டேரி நல்லா கால்வாயில் தொலைக்கல் 450 மீ முதல் 10840 மீ வரை ஒருங்கிணைந்த புனரமைத்தல் மற்றும் புத்துயிர் அளித்தல் பணிகள். | 4590.00 | 06.10.2023 11.00 மணி வரை | 06.10.2023 15.30 மணி |

இதர அனைத்து விவரங்களும் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளை **19.09.2023** முதல் **https://tntenders.gov.in** என்ற இணையதளத்தில் இலவசமாக பார்க்கவும் மற்றும் பதிவிறக்கவும் செய்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பித்தல் இணையத்தளத்தின் மூலமாக மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும்.

செ.ம.தொ.இ./ 5046 /ஒப்பந்தப்புள்ளி/2023

**சிறப்பு தலைமைப் பொறியாளர், நீ.வ.து., பாலாறு வடிநில வட்டம், சென்னை–5.**


### கிராண்ட் மாஸ்டர் வர்ஷினி முன்னிலையில்

# சென்னை வருவாய் மாவட்ட அளவிலான சதுரங்கப் போட்டி!

## இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., தொடங்கி வைத்தார்!

சென்னை, செப்.14-

பள்ளிக் கல்வித்துறை சார்பில் எழும்பூர், டான்பாஸ்கோ மெட்ரிகுலேஷன் பள்ளியில் நடத்தப்பெற்ற சென்னை வருவாய் மாவட்ட அளவிலான சதுரங்கப் போட்டியை, 2020ஆம் ஆண்டின் செஸ் கிராண்ட் மாஸ்டர் வர்ஷினி முன்னிலையில் கழக சட்டத்துறை இணை செயலாளரும் எழும்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் தொடங்கி வைத்தார்.

560 மாணவ, மாணவிகள் பங்கேற்ற இப்போட்டியில் வெற்றி பெறும் மாணவர்கள் தமிழ்நாடு மாநில அளவிலான சதுரங்கப் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெறுவர்.

இந்நிகழ்வில் டான் பாஸ்கோ பள்ளி தாளாளர் சேவியர் பாக்கியா, பள்ளி முதல்வர் மத்தியாஸ், ஆவிக்குரிய தந்தை ஜெரோம், மாவட்ட உடற்கல்வி தலைமை ஆய்வாளர் செங்கதிர், முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் ஸ்ரீபிரியா, புரசைவாக்கம் இ.எல்.எம். பள்ளி உடற்கல்வி இயக்குநர் ஜெயபால், டான்பாஸ்கோ பள்ளி உடற்கல்வி ஆசிரியர்கள் சாமுவேல், சேவியர், ஸ்டில் உள்ளிட்டப் பலர் கலந்துகொண்டனர்.





மதுரை தெற்கு மாவட்டத்திற்கு கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்க உள்ள நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்துவது, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடுவது, சேலத்தில் நடைபெறவுள்ள கழக இளைஞரணி இரண்டாவது மாநில மாநாட்டில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பது குறித்து மதுரை தெற்கு மாவட்ட கழக மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் சிறப்புரையாற்றிய போது எடுத்த படம். உடன் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் இன்பா ரகு மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் இளைஞர் அணி நிர்வாகிகள் உள்ளனர்.

## பாம்பன்-ராமேசுவரத்தை இணைக்கும் புதிய ரெயில்வே பால பணிகள்!

இராமேஸ்வரம், செப். 14-

பாம்பன்-இராமேசுவரம் தீவுப்பகுதியை இணைக்கும் வகையில் வாராவதி கடல் பகுதியில் 2.2 கிலோ மீட்டர் தொலைவில் 1914 ஆம் ஆண்டு கப்பல்கள் வந்து செல்லும் வகையில் ரெயில் பாலம் அமைக்கப் பட்டது. இந்த ரெயில் பாலத்தின் மையப்பகுதி கப்பல்கள் வந்து செல்லும் போது திறந்து மூடும் வகையில் வடிவமைக்கப்பட்டது. இந்த பாலம் இந்தியாவின் முதல் கடல் பாலம் என்ற பெருமையைப் பெற்றது. அத்துடன் நாட்டின் இரண்டாவது மிக நீளமான கடல் பாலமாகவும் அடையாளம் காணப்பட்டது.

இந்தப் பணிகள் முடிவடைந்தவுடன் தண்டவாளம் பொருத்தப்பட்டு மையப் பகுதிக்கு இழுத்துச் செல்லப்பட்டு இருபுறமும் தூண்கள் அமைக்கப்படும். இன்னும் 6 மாதங்களில் பணிகள் நிறைவடையும் என பணியில் ஈடுபட்டுள்ளார்கள்.

### திருமங்கலம் முத்தப்பன்பட்டியில்

# பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா: திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் அறிக்கை!

மதுரை, செப் 14 -

மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வரும் 15ஆம் தேதி பேரறிஞர் அண்ணா அவர்களின் 115 வது பிறந்த தினத்தை முன்னிட்டு திருமங்கலம் தொகுதி கல்லுப்பட்டி ஒன்றியம் முத்தப்பன் பட்டியில் அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்து இனிப்புகள் வழங்கப்படும் என மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார், அதன் விபரம் வருமாறு:-

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை எடுத்துரைத்து அதன்படி வாழ்ந்து மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் 115 வது பிறந்த தினம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வெகு சிறப்பாக கொண்டாடும் வகையில் வரும் 15.09.2023 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு திருமங்கலம் தொகுதி கல்லுப்பட்டி ஒன்றியம் முத்தப்பன் பட்டியில் அமைந்துள்ள சேடபட்டியார் திடலில் அன்னாரின் திருஉருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்து இனிப்புகள் வழங்கப்பட உள்ளது.

சிறப்பு மிக்க இந்நிகழ்ச்சியில் மதுரை தெற்கு மாவட்டத்தின் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழகத்தினர் என பெரும் திரளானோர் பங்கேற்று பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் விழாவை சிறப்பிக்க வேண்டும் என தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

# பூதப்பாண்டி பேரூரில் வாக்குச்சாவடி பாகமுகவர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ. மகேஷ் சிறப்புரை

நாகர்கோவில், செப்.14-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், பூதப்பாண்டி பேரூரில் உள்ள 13 வாக்குச் சாவடிகளில் 100 வாக்காளர்களுக்கு 1 முகவர் என்று நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்களுக்கான (BLC) ஆய்வு கூட்டம்12.09.2023, செவ்வாய்க்கிழமை அன்று மாலை 4.00 மணிக்கு திட்டுவிளை, சாலோம் திருமண மண்டபத்தில் வைத்து பேரூர் செயலாளர் ஆலிவர்தாஸ் தலைமையிலும், தோவாளை வடக்கு ஒன்றிய செயலாளர் மோ. பிராங்கிளின் மற்றும் கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் வெ. நம்பி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் கலந்து கொண்டு கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். மேலும் வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்களின் (BLC) வருகை பதிவேடு தனித்தனியே ஆய்வு செய்யப்பட்டது. கூட்டத் தில் தி.மு.க. மாவட்ட கழக துணை செயலாளர்கள் ஏ.ஆர். பூதலிங்கம்பிள்ளை, திருமதி. எஸ்.கரோலின் ஆலிவர்தாஸ், பொருளாளர் ஐ. கேட்சன், அணிகளின் நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ.2), வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்கள் (பி.எல்.சி.) உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பல இன்னல்களை நமக்கு தந்து கொண்டிருக்கிற ஒன்றிய பா.ஜ.க. அரசை வீழ்த்தும் விதமாக வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற வேட்பாளரை அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் களப்பணி ஆற்ற வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.





கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், பூதப்பாண்டி பேரூரில் வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்களுக்கான (பி.எல்.சி.) ஆய்வு கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் சிறப்புரையாற்றினார். இதில் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.